بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *16/10/2026* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரி மனநிறைவு, எளிமை மற்றும் ஏழ்மை ஆகியவற்றின் ஒளியில்**

أَشۡهَدُ أَنۡ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحۡدَهٗ لَا شَرِيۡكَ لَهٗ وَأَشۡهَدُ أَنَّ مُحَمَّدًا عَبۡدُهٗ وَرَسُوۡلُهٗ۔ أَمَّا بَعۡدُ فَأَعُوۡذُ بِاللّٰهِ مِنَ الشَّيۡطٰنِ الرَّجِيۡمِ۔

بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰهِ رَبِّ الۡعٰلَمِيۡنَ ﴿۲﴾ اَلرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ﴿۳﴾ مٰلِكِ يَوۡمِ الدِّيۡنِ ﴿۴﴾ إِيَّاكَ نَعۡبُدُ وَإِيَّاكَ نَسۡتَعِيۡنُ ﴿۵﴾

اِهۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِيۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِيۡنَ أَنۡعَمۡتَ عَلَيۡهِمۡ ۙ۬ غَيۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَيۡهِمۡ وَلَا الضَّآلِّيۡنَ ﴿۷﴾

قُلۡ مَاۤ اَسۡـَٔلُکُمۡ عَلَیۡہِ مِنۡ اَجۡرٍ وَّمَاۤ اَنَا مِنَ الۡمُتَکَلِّفِیۡنَ ﴿۸۷﴾

பொருள்: “நீர் கூறுவீராக! இந்தத் தப்லீகுக்காக, இந்தப் பணிக்காக நான் உங்களிடம் எவ்விதக் கூலியையும் கேட்கவில்லை; மேலும், நான் பகட்டாகப் பேசக்கூடியவனும் அல்லன்.” {38:87}

இந்த வசனத்தில் அல்லாஹ் மாநபி (ஸல்) அவர்களை இவ்வாறு அறிவிப்பு செய்யுமாறு பணிக்கிறான்: ‘மக்களிடையே அறிவிப்பு செய்துவிடுவீராக! நான் உங்களுக்கு இறைவனின் தூதுச் செய்தியை எட்ட வைப்பதும், உங்களின் வாழ்வு மேம்படுவதற்கான வழிகளைக் காட்டுவதும், உங்களின் இம்மை மற்றும் மறுமையை சரிசெய்து கொள்வதற்காகவும், உங்களின் பலனுக்காகவும் மட்டுமே ஆகும். இந்தப் பணிக்கு ஈடாக உங்களிடமிருந்து எனக்கு எதுவும் வேண்டாம்; எதுவும் தேவையுமில்லை. எனக்கோ இதற்கான கூலி எல்லாக் கருவூலங்களின் அதிபதியிடமிருந்தே கிடைத்துக் கொண்டிருக்கிறது.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறுகிறார்கள்:* பெருமானார் (ஸல்) அவர்களின் வாழ்க்கை இத்தகைய பகட்டை விட்டும் தூய்மையானது. ஒருவரின் வாழ்வு பகட்டிலிருந்து தூய்மையாக இருக்கும்போது, உலகியல் ஆசைகள் இருப்பதே இல்லை; மேலும், தேவைகளுக்கானப் பொருட்களை அல்லாஹ் தானே வழங்கிவிடுகின்றான்.’ மாநபி (ஸல்) அவர்கள் முஃமின்களுக்கும், “உங்களை எளிமையாக வைத்துக்கொள்ளுங்கள், செயற்கைத்தனங்களிலிருந்து தூய்மையாக்கிக் கொள்ளுங்கள்” என்று அறிவுறுத்தியுள்ளார்கள்.

ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்கள் அறிவித்துள்ளார்கள். ஹுஸூர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: “ஆதமின் மகனுக்கு வாழ ஒரு வீடு, தனது மானத்தை மறைக்கக் கூடிய அளவுக்கு உடைகள் மற்றும் உலர்ந்த ரொட்டியும் தண்ணீரும் தவிர வேறு எந்த உரிமையும் இல்லை.” உண்மையில் நபி (ஸல்) அவர்கள், “எனக்கு எவ்விதப் பகட்டும் தேவையில்லை” என்று தமது நிலையை, தமது வாழ்க்கையைப் படம்பிடித்துக் காட்டுகிறார்கள். இதன் காரணமாகவே மாநபி (ஸல்) அவர்கள் இந்த துஆவைச் செய்து வந்தார்கள், அதைப் பற்றி அபூ ஸயீத் குத்ரீ (ரலி) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். அன்னார், “எளியவர்களிடம் அன்பு செலுத்துங்கள்” என்று கூறினார்கள். இவர்களே கூறுகின்றார்கள், நான் பெருமானார் (ஸல்) அவர்கள் தமது துஆவில் இவ்வாறு கூறுவதைக் கேட்டேன்:

اَللّٰهُمَّ أَحْيِنِيْ مِسْكِيْنًا وَأَمِتْنِيْ مِسْكِيْنًا وَاحْشُرْنِيْ فِيْ زُمْرَةِ الْمَسَاكِيْنِ

பொருள்: அல்லாஹ்வே! என்னை எளியவனாக வாழச்செய்து, எளியவனாக மரணிக்கச் செய்து, எளியவர்களின் குழுவில் என்னை எழுப்புவாயாக!

ஹஸ்ரத் அபூ உமாமா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: சஹாபா பெருமக்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடம் உலகத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அப்பொழுது பெருமானார் (ஸல்) அவர்கள், "நீங்கள் கேட்கவில்லையா? நிச்சயமாக எளிமை ஈமானின் ஒரு பகுதியாகும். நிச்சயமாக எளிமை ஈமானின் ஒரு பகுதியாகும்" என்று இருமுறை விளித்து கவனமூட்டினார்கள். ஹஸ்ரத் இம்ரான் பின் ஹுஸைன் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:- கண்ணியத்திற்குரிய தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "நிச்சயமாக அல்லாஹ் முஃமினாக, வறியவராக, இரப்பதிலிருந்து தவிர்ந்து கொள்பவராக மற்றும் குடும்பப் பொறுப்புள்ளவராக இருக்கும் தன் அடியாரை நேசிக்கிறான்." எளிமையும், மனநிறைவும் இருக்கும்போது மட்டுமே மனிதனால் இரப்பதிலிருந்து தவிர்ந்திருக்க முடியும்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலியல்லாஹு அன்ஹுமா) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஏழை முஹாஜிர்கள், தங்கள் செல்வந்தர்களுக்கு தங்கள் மீது அளிக்கப்பட்டுள்ள மேன்மையைக் குறித்து மாநபி (ஸல்) அவர்களிடம் முறையிட்டார்கள். அப்பொழுது மாநபி (ஸல்) அவர்கள், ஏழை முஃமின்கள் தங்கள் செல்வந்தர்களைவிட அரை நாள், அதாவது, ஐந்நூறு ஆண்டுகள் முன்னதாகவே சொர்க்கத்தில் நுழைவார்கள் என்ற நற்செய்தியைக் கூறினார்கள். அறிவிப்பாளர் மூஸா இந்த வசனத்தை ஓதினார்கள்:

وَإِنَّ يَوْمًا عِندَ رَبِّكَ كَأَلْفِ سَنَةٍ مِّمَّا تَعُدُّونَ ﴿٤٨﴾

பொருள்: மேலும் நிச்சயமாக உம் இறைவனிடம் உள்ள ஒரு நாள், உங்கள் கணக்குப்படி ஆயிரம் ஆண்டுகள் கொண்டதாகும்." அதாவது, அரை நாள் என்பது ஐந்நூறு ஆண்டுகளைக் குறிக்கிறது.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறுகிறார்கள்:* இதன் பொருள் மனிதன் கைகளைக் கட்டிக் கொண்டு வெறுமனே அமர்ந்திருக்க வேண்டும், பணியாற்றக் கூடாது என்பதல்ல; மாறாக, தனது முழு கவனத்தோடும் கடின உழைப்போடும் பணியாற்றுவதும், எளிமையான வாழ்க்கை வாழ்வதும், போதும் என்ற மனப்பாண்மை கொள்வதும், அல்லாஹ்விற்கு நன்றி செலுத்துவதும் ஒரு நம்பிக்கையாளரின் நற்பண்பாகும்; இது அவரது ஈமானையும் அதிகரிக்கிறது.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலியல்லாஹு அன்ஹுமா) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எனது தோளைப் பற்றிக்கொண்டு, "நீ இவ்வுலகில் ஒரு வெளிநாட்டவனைப் போல அல்லது வழிபோக்கனான ஒரு பயணியைப் போல வாழ்வாயாக!" என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் இப்னு உமர் (ரலியல்லாஹு அன்ஹுமா) அவர்கள் கூறி வந்தார்கள்: 'மாலை வேளை வந்துவிட்டால் காலை வேளையை எதிர்பார்த்திராதீர்; காலை வேளை வந்துவிட்டால் மாலை வேளையை எதிர்பார்த்திராதீர். உமது உடல்நலத்திலிருந்து உமது நோய்க்காகவும், உமது வாழ்விலிருந்து உமது மரணத்திற்காகவும் வழிப்பயணப் பொருட்களைச் சேர்த்துக்கொள்வீராக!'

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் அறிவிப்பு வருகிறது. அவர்கள் சொற்பொழிவு மேடையில் நின்று இவ்வாறு கூறினார்கள்: நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறுவதை செவியுற்றுள்ளேன்: "கிறிஸ்தவர்கள் மர்யமின் மகனைப் புகழ்வதில் வரம்பு மீறியதைப் போல, என்னைப் புகழ்வதில் நீங்கள் வரம்பு மீறிட வேண்டாம். நானோ அல்லாஹ்வின் ஓர் அடியான் மட்டுமே ஆவேன். எனவே, அவனுடைய அடியார் மற்றும் அவனுடைய தூதர் என்று மட்டுமே கூறுங்கள்."

முத்தரிஃப் அவர்கள் தம் தந்தையிடமிருந்து அறிவிக்கிறார்கள்: நாங்கள் பனூ ஆமிரின் தூதுக்குழுவினரில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம், 'தாங்கள் எங்கள் தலைவர் ஆவீர்கள்' என்று கூறினோம். அதற்கு அன்னார், "தலைவனோ அல்லாஹ்வே ஆவான்" என்று கூறினார்கள். பிறகு நாங்கள், 'சிறப்பின் அடிப்படையில் தாங்களே மிகவும் சிறந்தவர், பெரும் நன்மை புரிவதில் தாங்களே மகத்தானவர்' என்று கூறினோம். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், "நீங்கள் சொல்ல வந்ததை சொல்லுங்கள்; இந்த வீணான புகழ்ச்சிகளை செய்யாதீர்கள்..... ஷைத்தான் உங்களை அச்சமற்றவர்களாக ஆக்கி விட வேண்டாம்" என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ரபீஃ பின்த் முஅவ்வஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். அவர்களின் திருமணத்தில் சிறுமிகள் தஃப் இசைத்து, பத்ரில் ஷஹீதானாவர்களைப் புகழ்ந்து கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒரு சிறுமி, 'நாளை என்னவெல்லாம் நடக்கும் என்பதை அறிந்த ஒரு நபி எமக்கிடையே இருக்கிறார்' என்று கூறினாள். அப்போது அண்ணல் நபி (ஸல்) அவர்கள், "இதை விட்டுவிடு; இதற்கு முன்பு நீ பாடிக்கொண்டிருந்ததையே பாடு" என்று கூறினார்கள். எங்கு அன்னாரைத் தேவையற்ற விதத்தில் புகழ்வதும், ஷிர்கும் வெளிப்பட்டதோ, அங்கு உடனடியாக நபி (ஸல்) அவர்கள் தடுத்து நிறுத்தி விட்டார்கள்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறுகிறார்கள்:* நபி பெருமானார் (ஸல்) அவர்களின் வீடு மற்றும் வசிப்பிடத்தின் எளிமையை பற்றி பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றது: ஹிஜ்ரத்துக்குப் பிறகு, மஸ்ஜித் நபவிக்கு அருகில் ஒரு 10-15 அடிகள் அளவுள்ள சிறிய அறை உருவாக்கப்பட்டது. அதன் கதவு பள்ளிவாசலில் திறக்கும். அந்த வழியாகவே நபி பெருமானார் (ஸல்) அவர்கள் தொழுகைக்காக வருகை தருவார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் சீரத் காத்தமுன்னபிய்யீனில் எழுதியுள்ளார்கள். மேலும், வரலாற்றில் விவரம் பின்வருமாறு காணப்படுகிறது: ஹஸ்ரத் ஹாரிஸா பின் நுஃமான் (ரலி) அவர்களுக்குப் பள்ளிவாசலின் சுற்றுப்புறங்களில் பல வீடுகள் இருந்தன. மாநபி (ஸல்) அவர்களின் திருமண உறவில் புதிய துணைவியார் வரும் போதெல்லாம், ஹாரிஸா (ரலி) அவர்கள் தம்முடைய ஒரு வீட்டை வழங்கிவிடுவார்கள்; எதுவரை என்றால், ஹாரிஸா (ரலி) அவர்களின் எல்லா வீடுகளும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குரியவையாக ஆகி விட்டன. மொத்தம் ஒன்பது வீடுகள் இருந்தன; அவற்றில் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் இறுதி பத்தாண்டுகளைக் கழித்தார்கள்; மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் வீட்டில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள். இந்த வீடுகள் சுடப்படாத செங்கற்கள், களிமண் மற்றும் பேரீச்ச மட்டைகளால் ஆகியிருந்தன; திரையின்மை ஏற்படாமலிருக்க அவற்றின் மீது உரோமங்களால் ஆன போர்வைகள் போடப்பட்டிருந்தன. ஒவ்வோர் அறையும் ஏறத்தாழ ஐந்து மீட்டர் நீளமும், தோராயமாக நான்கு மீட்டர் அகலமும் கொண்டிருந்தது. முற்றம் ஏறக்குறைய மூன்றரை மீட்டர் அகலமாக இருந்தது. மேலும், கூரைகளோ கையை உயர்த்தினால் தொடும் அளவுக்கு மட்டுமே உயரமாக இருந்தன.

அதாஃ அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் ஸயீத் பின் முஸய்யிப் (ரலி) அவர்கள் இந்த அறைகள் இடிக்கப்பட்ட நாளில் கூறினார்கள்: 'அல்லாஹ்வின் மீது ஆணையாக! இந்த அறைகள் அவை இருந்த நிலையிலேயே விட்டுவைக்கப்பட்டிருக்க வேண்டும் என்றே நான் விரும்பினேன்; அதனால் மாநபி (ஸல்) அவர்கள் எந்தளவுக்குக் குறைந்தபட்சப் பொருட்களில் மனநிறைவு அடைந்தார்கள் என்பதை மக்கள் கண்டிருப்பார்கள்.

ஹஸ்ரத் அபூ உமாமா (ரலி) அவர்களும், 'அந்தோ! இந்த அறைகள் அப்படியே விட்டுவைக்கப்பட்டிருக்கக் கூடாதா! மக்கள் உலகில் கட்டடங்களைக் கட்டுவதைக் குறைத்துக் கொண்டிருப்பார்களே!' என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தமது நபித்துவ வாதத்தில், ஆயிரக்கணக்கான அபாயங்கள் உருவான போதிலும்..... தொடக்கம் முதல் கடைசி மூச்சு வரை எந்தளவுக்கு மனவுறுதியுடன் உறுதியாகவும் நிலைத்தும் நின்றார்கள் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். வெற்றி பெறுவதிலிருந்து முற்றிலுமாக நம்பிக்கையிழக்கச் செய்யக்கூடியதும், நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்லக்கூடியதுமான அத்தகைய துன்பங்களையும் துயரங்களையும் பெருமானார் (ஸல்) அவர்கள் பல ஆண்டுகள் கண்டார்கள்; அவற்றை சகித்துக்கொள்வதன் மூலம் எந்தவோர் உலகியல் நோக்கத்தையும் அடைய முடியும் என்று கற்பனைகூட செய்து பார்க்க முடியாது..... பின்னர், நீண்ட காலத்திற்குப் பிறகு இஸ்லாத்திற்கு வெற்றி கிடைத்தபோது, அந்தச் செல்வ செழிப்பும் புகழும் நிறைந்த நாள்களில் எந்தவொரு கருவூலத்தையும் சேகரிக்கவில்லை, எந்தவொரு கட்டடமும் எழுப்பப்படவில்லை..... மாறாக, கிடைத்தவையெல்லாம் அனாதைகள், எளியவர்கள், விதவைப் பெண்கள் மற்றும் கடனாளிகளை அரவணைத்துப் பராமரிப்பதிலேயே செலவிடப்பட்டன; மேலும், அன்னார் ஒருபோதும் ஒருவேளை கூட வயிறார உண்ணவில்லை.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் இல்லத்தில் மாநபி (ஸல்) அவர்களின் படுக்கை தோலாலானதாக இருந்தது, அதில் பேரீச்சம் நார்கள் நிரப்பப்பட்டிருந்தன. ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்களின் இல்லத்தில் கம்பளிப் போர்வை இருந்தது. அதை அவர்கள் இரண்டாக மடித்து விரிப்பார்கள். ஒருநாள் இரவு நான்காக மடித்ததும், காலையில் பெருமானார் (ஸல்) அவர்கள், “இதை முன்பு இருந்தது போன்றே இருக்க விடுங்கள்; ஏனெனில் அதன் மென்மை இரவில் நான் தொழுவதற்குத் தடையாக இருந்தது” என்று கூறினார்கள்.

இதன்பொருள் அன்னாருக்கு உறக்கம் வந்துவிட்டது என்பல்ல; மாறாக, படுக்கையின் மீது நின்று கொண்டு தொழுவதில் சமநிலையும், இபாதத்தின் இன்பமும் இருந்தது. ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ‘அப்பொழுது வீடுகளில் விளக்குகள் இருக்காது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சஜ்தா செய்யும்போது என்னைத் தமது கையால் தொட்டு அழுத்துவார்கள்; உடனே நான் கால்களை மடக்கிக்கொள்வேன். அன்னார் எழுந்து நின்றதும் கால்களை நீட்டிக் கொள்வேன்.’

ஹஸ்ரத் அப்துல்லாஹ் மற்றும் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலியல்லாஹு அன்ஹுமா) ஆகியோர் அறிவிக்கிறார்கள்: அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஒரு பாயில் உறங்கினார்கள்; அது அன்னாரின் விலாப்புறத்தில் அடையாளத்தை ஏற்படுத்தியிருந்தது. இதைக் கண்ட ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் அவர்கள் அழுது விட்டார்கள். மேலும், ‘கிஸ்ரா மற்றும் கைஸர் பட்டு மற்றும் (பட்டின் ஒரு வகையான) தீபாஜ் ஆகியவற்றின் மீது நடக்கிறார்களே’ என்றார்கள். அதற்கு மாநபி (ஸல்) அவர்கள், “அழாதீர்! அவர்களுக்காக இவ்வுலகம் உள்ளது, நமக்காக மறுமை உள்ளது. எனக்கும் இவ்வுலகத்திற்குமான எடுத்துக்காட்டு, ஒரு மரத்தின் கீழே தங்கிவிட்டு, அங்கிருந்து புறப்பட்டுச் சென்றுவிடும் ஒரு பயணியைப் போன்றதேயாகும்” என்று கூறினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மாநபி (ஸல்) அவர்களை மேல்தளத்தில் ஒரு சாக்கின் மீது அமர்ந்திருக்கக் கண்டார்கள். அதன் அடையாளம் அன்னாருடைய விலாப்புறத்தில் இருந்தது. மேலும், தலைக்கு அடியில் பேரீச்ச நார் நிரப்பப்பட்ட தலையணை இருந்தது; இதைக் கண்ட அவர்கள் அழ ஆரம்பித்தார்கள். அப்பொழுதும் பெருமானார் (ஸல்) அவர்கள், “அவர்களுக்காக இவ்வுலகம் இருப்பதும், நமக்காக மறுமை இருப்பதும் உமக்கு மகிழ்ச்சி இல்லையா?” என்றே கேட்டார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் இந்த நிகழ்வை இவ்வாறு எடுத்துரைத்துள்ளார்கள்: அண்ணல் நபி (ஸல்) அவர்கள், “நானோ கடும் வெயிலில் ஒட்டகத்தின் மீது பயணிக்கையில், ஒரு மரத்தின் நிழலில் இளைப்பாறிவிட்டு, வியர்வைக் காய்ந்ததுமே புறப்படுகின்ற பயணியைப் போன்றவன்” என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றின் ஒரு பகுதியில் எழுதியுள்ளதன் சுருக்கமாவது, செல்வங்களைப் பங்கீடு செய்வதில் அன்னார் எந்தளவுக்கு எச்சரிக்கையாக இருந்தார்கள் என்றால், பிற்காலத்தில் மன்னர்கள் மக்களின் செல்வங்களைத் தங்களுக்கு அனுமதிக்கப்பட்டவையாகக் கருதிவிடக் கூடாது என்பதற்காக, ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களுக்கும், ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுக்கும் உரிமை இருந்தும், அவர்களுக்குப் பணியாளரை வழங்கவில்லை. ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் அறிவிப்பின்படி, ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களின் சீதனத்தில் ஒரு பட்டுப் போர்வை, பேரீச்ச நார் நிரப்பப்பட்ட தோலாலான ஒரு மெத்தை, மாவரைக்கும் இரண்டு திருகைகள், தண்ணீர்ப்பை மற்றும் இரண்டு மண் பானைகள் ஆகியவை இருந்தன.

ஹஸ்ரத் ஆயிஷா மற்றும் ஹஸ்ரத் உம்மு ஸலமா (ரலியல்லாஹு அன்ஹுமா) ஆகியோர் களிமண்ணால் அறையைப் பூசினார்கள்; பேரீச்ச நார் நிரப்பப்பட்ட இரண்டு தலையணைகளைத் தயார் செய்தார்கள். மக்களுக்கு உண்பதற்குப் பேரீச்சம்பழத்தையும் திராட்சையையும், பருகுவதற்கு இனிமையான தண்ணீரையும் வழங்கினார்கள். மேலும், 'ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களின் திருமணத்தை விடச் சிறந்த ஒரு திருமணத்தை நாங்கள் கண்டதேயில்லை' என்றும் கூறினார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வாழ்வின் இறுதிக் காலத்தில் ஓர் அரசராகத் திகழ்ந்தார்கள்; எனினும், உலகியல் பயன்கள் எதையும் பெறவில்லை. சொத்துக்களையும் தமக்குரியதாகவும் அறிவிக்கவில்லை; வாரிசுகளுக்கும் வழங்கவில்லை. வஃபாத் வேளையிலும் கூட, மாநபி (ஸல்) அவர்களின் பொருட்கள் வீட்டுச் செலவுகளுக்காக அடமானம் வைக்கப்பட்டிருந்தன. போர்ச் செல்வத்திலிருந்து ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள் அடிமைப்பெண்ணை வழங்குமாறு கேட்டுக் கொண்டபோது, நபிநாதர் (ஸல்) அவர்கள், "இந்த சொத்து என்னுடையதல்ல; இறைவனுடையதாகும். நீ இறைவனை ஸிக்ர் செய்துகொண்டிரு; அடிமைப்பெண் பற்றிய எண்ணத்தைக் கைவிட்டுவிடு" என்று கூறினார்கள்.

அஸ்வத் அவர்கள் அறிவிக்கிறார்கள்:- ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள்: 'ஹுஸூர் (ஸல்) அவர்கள் தமது குடும்பத்தினரின் வீட்டு வேலைகளில் உதவி புரிந்து வந்தார்கள். தொழுகைக்கான நேரம் வந்ததும், தொழுகைக்காகச் சென்றுவிடுவார்கள்.'

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:* பல பெண்கள் தங்களுடைய கணவன்மார்களைப் பற்றி, வீடுகளில் அவர்களின் போக்கு மிகவும் கொடூரமானதாகவும் அதிகாரத்தனமானதாகவும் இருப்பதாக எனக்கு எழுதுகிறார்கள். அவர்கள் அதிகாரியாக ஆகி இருப்பதற்கு முயற்சி செய்கின்றனர். எனவே, இத்தகைய கணவன்மார்கள் இந்த முன்மாதிரியைப் பார்த்துத் தம்மைத் திருத்திக்கொள்ள வேண்டும்.

ஹஸ்ரத் ஹஸனா பின் ஃஹாலித் மற்றும் ஹஸ்ரத் சவாத் பின் ஃஹாலித் (ரலியல்லாஹு அன்ஹுமா) ஆகியோர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு சுவரைப் பழுதுபார்ப்பதைக் கண்டதும் அந்தப் பணியில் அன்னாருக்கு உதவினார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மற்ற மனிதர்களைப் போல ஒரு மனிதராகவே இருந்தார்கள்; தமது ஆடைகளைத் தாமே துவைத்துக் கொள்வார்கள், ஆட்டின் பாலைக் கறப்பார்கள், மேலும், தம்முடைய வேலைகளைத் தாமே செய்து கொள்வார்கள். காஃபிர்கள், 'இவர் எப்படிப்பட்ட தூதர்! உணவும் உண்கிறார்! சந்தைகளிலும் நடந்து திரிகிறாரே!' என்று கூறி வந்தார்கள்.

மாநபி (ஸல்) அவர்கள் பணிவையும், தன்னடக்கத்தையும் கடைப்பிடித்து வந்தார்கள். அகந்தையிலிருந்து தவிர்ந்து கொள்வதற்கான செயல்முறைப் பயிற்சியையும் வழங்கினார்கள்.

ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். நபிநாதர் (ஸல்) அவர்கள், “ஆடுகளை மேய்த்திராத எந்தவொரு நபியையும் அல்லாஹ் அனுப்பியதில்லை..... நானும் சில கீராத்துகளுக்கு மக்கத்தினரின் ஆடுகளை மேய்த்துள்ளேன்” என்று கூறினார்கள்.

சூரா அல் கஸஸின் 28, 29 ஆகிய வசனங்களில், ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களும் கூலி பெற்று பணிபுரிந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஹதீஸ் விரிவுரையாளர்களும், சய்யித் ஸைனுல் ஆபிதீன் வலியுல்லாஹ் ஷாஹ் சாஹிப் அவர்களும், ‘கராரீத்’ என்பது கீராத் என்பதன் பன்மையாகும் என்றும், ஒரு ‘கீராத்’ என்பது நான்கு ரத்தி (தோராயமாக 486 மில்லிகிராம்) வெள்ளியின் எடையளவுக்குச் சமமானதும், திர்ஹமின் ஒரு பதியுமாகும் என்றும் விளக்கியுள்ளார்கள். அதாவது, இது கூலியாகுமே அன்றி, இடத்தின் பெயர் ஒன்றும் அல்ல. அல்லாமா புர்ஹானுத்தீன் ஹலபீ அவர்களும் இதையே எழுதியுள்ளார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஆரம்ப வயதை ஆதரவற்ற, அனாதையான நிலையிலேயே கழித்தார்கள்; ஆடுகளை மேய்தார்கள். மேலும், நபிமார்களிடம் அகந்தை இல்லாதிருக்கும் பொருட்டு, அல்லாஹ் அவர்களின் பங்கில் வறுமையையும் வைத்து விட்டான். ஒரு காட்டைக் கடந்து செல்லும்போது, கண்ணியத்திற்குரிய தூதர் (ஸல்) அவர்கள் சஹாபா பெருமக்களிடம் ஒரு மரத்தின் இனிய பழங்களை உண்ணுமாறும், ஆடுகளை மேய்த்து வந்த காலத்தில், தாம் இந்தப் பழங்களை உண்டதுண்டு என்றும் கூறினார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ரோமாபுரி பேரரசு மற்றும் ஈரான் (அதாவது, பாரசீகப் பேரரசு) ஆகிய அரசாளுமைகளின் கடிதங்கள் மற்றும் தூதுவர்கள் வந்து சென்ற போதிலும், மாநபி (ஸல்) அவர்கள் தொண்டர்களின் எந்தக் கூட்டத்தையோ அல்லது பணியாளரையோ வைத்திருக்கவில்லை. மாறாக, வீட்டு வேலைகளைத் தாமே செய்து வந்தார்கள். உலகில் பேரரசராக இருந்து கொண்டு ஏழ்மையை மேற்கொள்வதும், இலட்சக்கணக்கான பணத்தை மக்களிடையே பகிர்ந்தளித்துவிட்டு, வீட்டு வேலைகளையும் தாமாக செய்துகொள்வதும், நபி பெருமானார் (ஸல்) அவர்கள் மற்றும் அன்னாருடைய தொண்டர்களுக்கே உரித்தான தனிச்சிறப்பாகும்.

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَّعَلٰى آلِ مُحَمَّدٍ وَّبَارِكْ وَسَلِّمْ إِنَّكَ حَمِيْدٌ مَّجِيْدٌ

*குத்பாவின் இறுதியில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் அநீதிக்குள்ளாக்கப்பட்ட அஹ்மதிகளுக்காக துஆக்கள் செய்யுமாறு அறிவித்தவாறு கூறினார்கள்:* சுய பலன்களைக் கொண்டவர்கள், பயங்கரவாதிகள் அஹ்மதிகள் மீது அநீதியழைத்துக் கொண்டிருக்கிறார்கள். அரசாங்க அதிகாரிகளும் அவர்களுக்குத் துணைபுரிகிறார்கள். முல்லாக்களின் மீதான அச்சத்தினால் நீதிபதிகள் ஜாமீனில் விடுவதில்லை. இவ்வாறே மலேஷியாவிலும் ஜமாஅத்திற்கு எதிராகச் சூழல்கள் மிகவும் மோசமாகவுள்ளன. நம்முடைய பள்ளிவாசல்களில் திடீர்ச் சோதனைகள் நடத்தப்படுகின்றன, எல்லாம் வல்ல அல்லாஹ் மலேஷிய அஹ்மதிகளையும் தனது பாதுகாப்பில் வைத்திருப்பானாக.

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ
يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ
اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا
اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: முரப்பி அத்தாவுல் முஃக்னீ)**